Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 176/2025
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 01 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சக்திவேல் | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | திரு. ஜெயராமன் | தொழில் | கான்டாக்டர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 49 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 3 |
| **எதிரி ஆஜர்** | | | 1,2,4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 07th day of October 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.01. திரு. சக்திவேல் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கான்டாக்டர் பணி செய்து வருகிறேன். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 13.01.2025 அன்று எனது அம்மா திருமதி. ஜெயலட்சுமி திருப்பத்தூர் சின்னகடை தெருவில் உள்ள ரேசன் கடையில் விழா கால பொருட்கள் வாங்குவதற்காக சென்றுள்ளார். அந்த சமயம் நான் வெளியில் இருந்தேன். அந்த சமயத்தில் ரேசன் கடையில் உள்ளவர்கள் தமிழக அரசு வழங்கிய பொங்கல் பரிசு பொருட்கள் 3 பொருட்கள் மட்டும் கொடுத்து விட்டு மற்ற பொருட்களை கொடுக்காமல் இருந்ததால் அதை என் தாயார் கேட்டதற்கு என் தாயாரை அவர்கள் ஒரு மாதிரியாக பேசினார்கள். என் தாயார் வயதானவர் என்பதால் என் அக்கா மகன் சீனிவாசன் என்பவர் உடன் சென்றிருந்தார். அவரையும் எதிரிகள்

ஒரு மாதிரியாக பேசினார்கள். பின்பு சீனிவாசன் எனக்கு போன் செய்து தகவல் கூறினார். தகவல் கிடைத்தவுடன் நான் உடனே மதியம் 2.30 மணியளவில் ரேசன் கடைக்கு சென்றேன். நான் ரேசன் கடை இருக்கும் தொகுதிக்கு திமுக பொறுப்பாளராக உள்ளேன். அப்போது அங்கிருந்தவர்களிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 4ம் எதிரி என்னை தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டினார். அங்கு பல நபர்கள் இருந்ததால் கட்சிக்கு கெட்ட பெயர் ஏற்பட வேண்டாம் என்று நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். அன்றைய தினமே இரவு 10.40 மணிக்கு நான் என் வேலையை முடித்து விட்டு AGS திருமணமண்டபம் அருகே நான் இருசக்கர வாகனத்தில் வந்த போது 1 ம் எதிரி அங்கு வந்து கேத்தா கொம்மா என்று என்னை அசிங்கமாக திட்டி என் தம்பிகளிடம் சண்டை பிடிக்கிறியா என்று அசிங்கமாக திட்டினார். மேலும் 1 முதல் 4 எதிரிகள் அங்கு இருந்தார்கள். 1ம் எதிரி பழனி கையால் என் மூக்கின் மீது குத்தினார். இளையராஜ மற்றும் ஜெயமோகன் என்னை காலால் வயிற்று மீது எட்டி உதைத்தார்கள். 2 ம் எதிரி கார்த்திக் என்பர் ஒரு கட்டையால் என் தலையில் தாக்கி இரத்த காயம் ஏற்படுத்தினார். சம்பவ இடத்தில் என்னுடன் பேசிக்கொண்டிருந்த இரவி என்பவர் என்னை காபாற்றி திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நான் சிகிச்சையில் இருந்த போது அன்றைய இரவு காவல் உதவி ஆய்வாளர் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காட்டப்படும் கட்டை தான் 02 ம் எதிரி என்னை தாக்க பயன்படுத்திய கட்டை ஆகும். ( **அந்த கட்டை அ.சா.பொ 1 ஆக குறியீடு செய்ய்படுகிறது** ). போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. நான் ரேசன் கடைக்கு அரசாங்கத்திடம் கான்டாக்டர் எடுத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் எடுத்த காண்டாக்ட் 1 வருடத்திற்கான காண்டாக்கட் ஆகும். நான் சம்பவ இட ரேசன் கடைக்கு சப்லை செய்வதில்லை. அந்த கடைக்கு நான் காண்டாக்டர் இல்லை. நான் 20 வருடங்களாக ரேசன் கடைக்கு சப்லை செய்வதாக போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. சுமார் 10 வருடங்களாக சப்லை செய்கிறேன். எனக்கு அரசாங்கத்திடம் பழக்கப்பட்ட ஒப்பந்தம் காலவதி ஆகிவிட்டது என்றாலும் ஆனால் நான் சட்ட விரோதமாக இன்னும் சப்லை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் தெரிவித்த விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் தெரிவித்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என் தாயார் ரேசன் கடைக்கு அட்டை இல்லாமல் சென்று பொருட்கள் கேட்டதால் 4 ம் எதிரி பொருட்கள் கொடுக்க மறுத்து விட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை. ரேசன் கடை இருக்கும் வார்டுக்கு என்னை தவிர மற்ற பிரதிநிதிகளும் உண்டு என்றால் சரிதான்.

2. அந்த வார்டுக்கு என் கட்சி செயலாளர் திரு. L. கருணாநிதி ஆவார். பொங்கள் பொருட்களை விழா வைத்து கொடுத்தார்களா என்றால் விழா வைக்காமல் அப்படியே வினியோகம் செய்தார்கள். பொங்கள் பொருட்களை கொடுக்கும் விழா விற்கு 21 வார்டு தலைவரை அழைத்து விட்டு என்னை அழைக்க வில்லை என்று நான் கேட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு 21 வார்டு தலைவரை அழைத்ததாகவும் என்னை வேண்டும் என்றே அழைக்கவில்லை என்று நான் புகாரில் தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான். என் மீது பல வழக்குகள் உள்ளன என்றால் எனக்கு நினைவில்லை. என்மீது வேடி என்பர் புகார் அளித்து CC No. 56/2015 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில்

உள்ளதா என்று எனக்கு நினைவில்லை. என் மனைவி வட்ட வழங்கள் அதிகாரிகள் இடம் 4 ம் எதிரி பொங்கல் பொருட்கள் கொடுக்க வில்லை என்று புகார் அளித்தாரா என்றால் பொருள் கொடுக்காததை கேட்டதால் என்னை தாக்கியதாக தான் புகார் அளித்தார். அந்த விசாரணையில் பொருள் கொடுத்ததற்கான ஆதாரங்களை அவர் கொடுத்ததால் அந்த புகாரில் அவர் மீது நடவடிக்கை எடுக்க படவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு இவ்வழக்கு சம்மந்தமாக சென்றேன் என்றால் இல்லை.

3. மருத்துவமனைக்கு தான் நேராக சென்றேன். அதன் பின்பு மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆன பின்பு காவல் நிலையம் சென்றேன். என்னை தாக்க பயன்படுத்திய கட்டை நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என்னை தாக்க பயன்படுது்திய கட்டைக்கு அங்க அடையாளங்கள் கூற இயலுமா என்றால் 4 நபர்கள் என்னை சுழ்ந்து தாக்கியதால் கட்டையின் அடையாங்கள் என்னால் கூறிப்பிட்டு பார்க்க இயலவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திருக்கு கட்டையை நான் ஏற்கனவே அடையாளம் காட்டிவிட்டேன். போன வருடம் பொங்கல் பொருட்கள் கொடுத்த போதும் 4ம் எதிரியிடம் நான் பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை. 1 ம் எதிரி கிருஷ்ணகிரியில் மருத்து கடை வைத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் 4 ம் எதிரியை தாக்கியதால் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு என் மீதும் என் மைத்துனர் மீதும் புகார் அளித்து குற்ற எண். 18/2025 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் ரேசன் அட்டை இல்லாமல் வந்த போது 4 ம் எதிரி பொருட்கள் கொடுக்க மறுத்ததால் நானும் சீனிவாசன் என்பவரும் இரவு நேரத்தில் 4 ம் எதிரியை தாக்கி எலும்பு முறிவு ஏற்படுத்திவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரிகளை தவிர வேறு யாறு இருந்தார்கள் என்றால் என்னை அடித்த பின்பு எனக்கு மயக்கம் வந்து விட்டதால் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் வீட்டிற்கும்

சம்பவ இடத்திற்கும் சுமார் 2 தெருக்கள் தாண்டிதான் உள்ளன. 4 ம் எதிரியின் வீடானது சம்பவஇடத்தில் இருந்து 2 தெருக்கள் தள்ளி உள்ளது. 1ம் எதிரி கிருஷ்ணகிரியில் இருந்து வரும் நேரத்தை தெரிந்து கொண்டு காத்திருந்து அவரை தாக்கினோம் என்றால் சரியல்ல. என் மீது வழக்கு உள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் மீது 4ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை.